# ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

NEET , JEE AND BOARD EXAM பயிற்சி மையம்,

SBM பள்ளி வளாகம், திருச்சி மெயின் ரோடு, நாமக்கல்

அலைபேசி : 99655-31727, 94432 - 31727


## முதல் இடைப்பருவத்தேர்வு ஜூலை - 2019

### பத்தாம்வகுப்பு சமூக அறிவியல் விடைக்குறிப்புகள்

மதிப்பெண்கள்:50

| வினா எண். | விடைக்குறிப்புகள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| | பகுதி -அ<br>**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** | **5x1=5** |
| 1. | அ) லெனின் | 1 |
| 2. | இ) 2, 3 சரி | 1 |
| 3. | ஈ) பக்ராநங்கல் அணை | 1 |
| 4. | அ) குடியரசுத் தலைவர் | 1 |
| 5. | அ) வளர்ந்து வரும் பொருளாதாரம் | 1 |
| | **II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** | 4x1=4 |
| 6. | கெஸ்டபோ | 1 |
| 7. | பாங்கர் | 1 |
| 8. | நீதி (5) | 1 |
| 9. | சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (தொழில் ) | 1 |
| | **III. பொருத்துக.** | 5x1=5 |
| 10. | ஹின்டன் பர்க் - ஜெர்மனி | 1 |
| 11. | கடலோரக் காடுகள் - கடற்கரைப் பகுதி | 1 |
| 12. | தேசிய அவசர நிலை - 1962 | 1 |
| 13. | GST - பண்ட மற்றும் பணிகள் மீதான வரி | 1 |
| 14. | தோட்டக்கலை - தங்கப்புரட்சி | |
| | **IV. சுருக்கமான விடையளி (ஏதேனும் 5)** | 5x2=10 |
| 15. | டாலர் ஏகாதிபத்தியம்<br>➢ *டாலர் ஏகாதிபத்தியம்: இச்சொல் தொலைதூர நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்வதன் மூலம் அவற்றின்மீது ஆதிக்கம் செலுத்தவும், தக்கவைத்துக் கொள்ளவும், அமெரிக்கா பின்பற்றியக் கொள்கையைவிளக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதாகும்* | **2** |
| 16. | பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்கள்<br>➢ **"பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள்" எனக்குறிக்கப்படும் உலக வங்கி, பன்னாட்டு நிதி அமைப்பு ஆகிய இரண்டும் 1944 இல் நடைபெற்ற பிரெட்டன் உட்ஸ் மாநாட்டிற்குப்பின் 1945இல் நிறுவப்பட்டன** | 2 |
| 17. | இலட்சத்தீவு கூட்டங்கள்<br>➢ **இந்தியாவின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ளஇலட்சத்தீவு முருகைப்பாறைகளால் ஆனது.** | 2 |

| | | |
|---|---|---|
| | ➢ இத்தீவுகள்சுமார் 32 ச.கி.மீ பரப்பளவைக்கொண்டதாகும். இதன் நிர்வாகத் தலைநகரம் காவராத்தி ஆகும்<br>➢ இலட்சத்தீவுக் கூட்டங்களை 8° கால்வாய் மாலத்தீவிலிருந்து பிரிக்கிறது. இங்கு மனிதர்கள் வசிக்காத பிட் தீவு(Pitt Island) பறவைகள் சரணாலயத்திற்கு பெயர் பெற்றது. | |
| 18. | "பருவ மழை வெடிப்பு"<br>➢ தென்மேற்கு பருவக்காற்று தொடங்குவதற்கு முன்வட இந்தியாவின் வெப்ப நிலையானது 46°C வரை உயருகிறது. இப்பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன்எகூடிய துவக்கம் (தென்இந்தியாவில்)'பருவமழை வெடிப்பு' எனப்படுகிறது. | 2 |
| 19. | நீதிபேராணை<br>➢ நீதிமன்றமுத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணைநீதிப்பேராணைஎனப்படும். இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும். | 2 |
| 20. | மத்திய அரசின் பல்வேறு அமைச்சர்களின் வகைகள்<br>➢ கேபினெட் (அ) ஆட்சிக்குழு அமைச்சர்கள்<br>➢ இராசாங்க அமைச்சர்கள்<br>➢ இணை அமைச்சர்கள் | 2 |
| 21. | GDO யில் பங்களிப்புகள்<br>➢ முதன்மைத் துறை - விவசாயத்துறை<br>எ.கா கால்நடைப் பண்ணைகள் , மீன்பிடித்தல், சுரங்கத் தொழில்<br>➢ இரண்டாம் துறை - தொழில்துறை<br>எ.கா இரும்பு மற்றும் எஃகு தொழில, ஜவுளித் தொழில், சணல் தொழில்<br>➢ மூன்றாம் துறை - பணிகள் துறை<br>எ.கா அரசு அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து தகவல் தொடர்புத் தொழில்கள் | 2 |
| | VII. கீழ்க்கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினை தேர்வு செய்க. | 4x½ =2 |
| 22. | தென் அமெரிக்க அரசியல் நிகழ்வுப் போக்குகள்<br>அ) 1830<br>ஆ) ஐந்து குடியரசுகள்<br>இ) 1898<br>ஈ)பொருளாதாரப் பெருமந்தத்தால் உருவானசூழ்நிலையில் சிலரின் அல்லது சில குடும்பங்களின் ஆட்சியால் பல உறுதியான குழுக்களின் எதிர்பார்ப்புகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. | 2 |
| 23. | ஸ்டாலின் கிரேடு போர்<br>அ) ஆகஸ்ட் -1942<br>ஆ) ஆயுதங்கள் மற்றும் டிராக்டர்கள்<br>இ) ∴பால் புளு<br>ஈ) ஸ்டாலின் கிரேடு நகரை கைப்பற்றி விட்டால் தெற்கு ரஷ்யாவுடனான சோவியத்தின் போக்குவரத்துத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விடும். மேலும் காகஸஸ் பகுதிகளிலுள்ள எண்ணெய் வயல்களைச் சென்றடைவதற்கு ஜெர்மன் படைகளுக்கு ஸ்டாலின் கிரேடு வசதியாக இருக்கும். | 2 |

VI. கீழ்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு காரணம் கூறு.

24. இந்திய பெரும் பாலைவனம் பகுலதவி என்று அழைக்கப்படுகின்றது. — 2

- இப்பாலைவனம் ஆரவல்லி மலைத்தொடரும் மேற்கே இராஜஸ்தான் மாநிலத்தின் மூன்றில் இரண்டு பங்கு நிலப்பரப்பைக் கொண்டுள்ளது
- இந்த பாலைவனப் பகுதி மருஸ்தலி என்றும் அரை பாலைவனப்பகுதி பாங்கர் என்றும் இரு பகுதிகளாக அழைக்கப்படுகின்றன.
- இப்பாலைவனப் பகுதியில் பல உப்பு ஏரிகளும், மணல் திட்டுகளும் உள்ளன

25. மழை நீர் சேகரிப்பு — 2

- பருவகால மாற்றம் மற்றம் மலைமறைவுப் பிரதேசத்தில் தமிழ்நாடு அமைந்துளன்னதால் குறைந்த மழை அளவையே பெறுகிறது
- எனவே, கோடை காலங்களில் குடிநீர், விவசாயம் போன்ற தேவைகளைத் தீர்க்க மழை நீர் சேமிப்பு அவசியம்

VII. கீழ்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றினை வேறுபடுத்துக.

26. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள் — 2

| | இமயமலை ஆறுகள் | | தீபகற்ப ஆறுகள் |
|---|---|---|---|
| 1 | இவை வட இந்தியாவில் பாய்கினறன | 1 | இவை தென் இந்தியாவில் பாய்கின்றன |
| 2 | அவை வற்றாத ஜீவ நதிகள் | 2 | இவை பருவகால அல்லது வற்றும் ஆறுகள் |
| 3 | நீர்மின் உற்பத்தி செய்ய இயலாத நிலை | 3 | நீர்மின் உற்பத்திக்கு ஏற்றது |
| 4 | போக்குவரத்துக்கு ஏற்றது | 4 | போக்குவரத்துக்கு ஏற்றதல்ல |

27. ராபி பருவம் மற்றும் காரு.்.ப் பருவம் — 2

| | ராபி பருவம் | | காரி.்.ப் பருவம் |
|---|---|---|---|
| 1 | இதன் காலம் அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரை | 1 | இதன் காலம் ஜிலை முதல் செபபம்பர் மாதம் வரை |
| 2 | வடமாநிலங்களில் கோதுமை, பருப்பு, ஆலிவிதைகள், கடுகு, பார்லி முதலான பயிர்கள் பயிரிடப்படுகின்றன | 2 | வடமாநிலங்களில் நெல் , பருத்தி, மக்காச்சோளம் சோளம், கம்பு, உளுந்து முதலான பயிர்கள் பயிரிடப்படுகின்றன |
| 3 | தென்மாநிலங்களில் நெல், மக்காச்சோளம், கேழ்வரகு, நிலக்கடலை கம்பு , முதலான பயிரிடப்படுகின்றன | 3 | தென் மாநிலங்களில் நெல , கேழ்வரகு , மக்காச்சோளம் , நிலக்கடலை, கம்பு முதலான பயிரிடப்படுகின்றன |
| 4 | விதைக்கும் பருவம் குளிர்காலத்துவக்கமான அக்டோபர் மாதம் | 4 | விதைக்கும் பருவம் குளிர்காலத்துவக்கமான செப்டம்பர் மாதம் |

**VII கீழ்க்கண்ட பத்தி வினாக்களில் ஏதேனும் இரண்டிற்கு விடையளிக்க**

28.

**சங்கத்தின் செயல்பாடுகள்** 5

- *1920–1925 ஆகிய ஆண்டுகளிடையே பன்னாட்டுச் சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்து வைக்கஅழைக்கப்பட்டது. மூன்று பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் சங்கம் வெற்றிபெற்றது.*
- *1920இல் பின்லாந்தின் மேற்குக்கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்கு கடற்கரைக்கும் இடையில் ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது.*
- *பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது எனத் தீர்ப்பளித்தது. அடுத்தஆண்டில் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலைசைலேஷியா பகுதியில் எல்லைப் பிரச்சனை ஏற்பட்டு, பிரச்சனையைத் தீர்த்து அழைக்கப்பட்டபோது அப்பிரச்சனையைச் சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது. மூன்றாவது பிரச்சனை கிரீஸ், பல்கேரியா நாடுகளிடையே ஏற்பட்டதாகும்.*
- *கிரீஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்தபோது பன்னாட்டுச் சங்கம் போர் நிறுத்தம் செய்யஉத்தரவிட்டது.*
- *விசாரணைக்குப்பின் கிரீஸின் மீது குற்றஞ்சாட்டி, கிரீஸ் போர்இழப்பீடு வழங்கவேண்டுமெனத் தீர்மானித்தது. ஆகவே 1925இல் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்தாகின்ற வரை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாகவே செயலாற்றியது.*
- *லொக்கர்னோஉடன்படிக்கையின்படி ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலhந்து, இத்தாலி ஆகிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பரம் அமைதிக்கு உத்தரவாதமளித்தன.*
- *இதன் பின்னர் ஜெர்மனி பன்னாட்டுச் சங்கத்தில் இணைந்தது. பாதுகாப்புக் குழுவிலும் நிரந்தர இடமளிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்காவும் ரஷ்யாவும் சங்கத்தினுடைய அரசியல் அல்லாத நடவடிக;கைகளில் பங்கேற்கத் தொடங்கின.*

*தோல்விக்கானக் காரணங்கள்*

- *பன்னாட்டுச் சங;கம் முதல் உலகப்போரில் வெற்றிபெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது. உலகஅளவில் அது உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும் அது ஐரோப்பிய அரசியல் விவேகத்தின் மையமாக மாறியது.*
- *அரசியல் பிரச்சனைகளில் சங்கம் எடுக்கும் முடிவுகளுக்கு உறுப்பினர்கள்அனைவரின் ஏகோபித்தஆதரவு அவசியமாயிற்று. சங்கத்திற்கென்று ராணுவம் இல்லைஎன்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.*
- *அமைதிக்கான இவ்வமைப்பைஉருவhக்கியவர்கள் தேசியவhதத்தின் உள்ளார்ந்த ஆற்றலை உணர்ந்திருக்கவில்லை. 'கூட்டுப்பாதுகாப்பு' எனும் கோட்பாட்டைநடைமுறையில் செயல்படுத்தவேமுடியவில்லை.*
- *சர்வாதிகாரிகளால் தலைமையேற்கப்பட்டஇத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள்சங்கத்தின் ஆணைகளுக்குக்கட்டுப்பட மறுத்தபோது, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள்மட்டுமேஉறுதியாகச் செயல்படும் நிலையிலிருந்தன. ஆனால் இவ்விருநாடுகளும் சங;கத்திற்கு ஆர்வத்துடன் ஆதரவளிக்கும் நாடுகளல்ல. இவ்வமைப்பு உட்ரோவில்சனின் சிந்தை செயல்வடிவமாக இருந்தபோதிலும் அவரால் தன்நாட்டையே ஒத்துக் கொள்ளச் செய்து சங்கத்தில் உறுப்பினராக்க முடியவில்லை*

www.Padasalai.Net www.TrbTnpsc.com

29. **தீபகற்ப ஆறுகளைப் பற்றி கூறுக.** 5

- தென் இந்தியாவில் பாயும் ஆறுகள்தீபகற்பஆறுகள்எனப்படுகின்றன. பெரும்பாலானஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன. இவை பருவகால ஆறுகள் அல்லது வற்றும் ஆறுகள்எனப்படும். நீரின் அளவு மழைப்பொழிவிற்கு ஏற்றாற்போல் மாறுபடுகிறது இவ்வாறுகள் செங்குத்து சரிவுடன் கூடிய பள்ளத்தாக்கு வழியேபாய்கிறது. தீபகற்ப ஆறுகளைஅவைபாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை
- **கிழக்**குநோக்கி பாயும் ஆறுகள்
- **மே**ற்கு நோக்கி பாயும் ஆறுகள்

- <u>**கிழக்**குநோக்கி பாயும் ஆறுகள்</u>

**அ) மகாநதி**

**இந்நதி சத்தீஸ்கார் மாநிலத்திலுள்ளராய்ப்பூர் மாவட்டத்திலுள்ள சிகாவிற்கு அருகில் உற்பத்தியாகி ஒடிசா மாநிலத்தின் வழியாக சுமார் 851 கி.மீ நீளத்திற்குப்பாய்கிறது. சீநாத், டெலன், சந்தூர், சித்ரட்லா, கெங்குட்டி மற்றும் நன் ஆகியவைஇதன் முக்கிய துணையாறுகளாகும். மகாநதி பல கிளை யாறுகளாகப்பிரிந்து இந்தியாவின் மிகப்பெரிய டெல்டாக்களை உருவாக்குகிறது. இந்நதி வங்காள விரிகுடாவில் கலக்கிறது.**

**ஆ) கோதாவரி**

- **தீபகற்பஇந்தியாவில் பாயும் மிக நீளமானஆறான(1465 கி.மீ) கோதாவரி, மகாராஷ்ட்ராமாநிலம் நாசிக்மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. இந்நதி விருத்தகங்காஎனவும் அழைகக்கபடுடகிறது. இது 3.13 இலட்சம் சதுர.கி.மீ பரப ்பளவு வடிநிலத்தைக்கொண்டது. இது ஆந்திரப்பிரதேசம் வழியாக பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது. பூர்ண, பென்கங்கா, பிரனிதா, இந்திராவதி, தால் மறறும் சாலாமி போன்றனவ இவற்றின் துனையாறுகள ஆகும். இந்நதி ராஜமுந்திரிககு அருகில் கவுதமி மறறும் வசிஸ்தா என இரண்டு கினளகளாகப பிரிந்து மிகப பெரிய டல்டானவ உருவாககுகிறது. கோதாவரி டெல்டா பகுதியில் நன்னீர் ஏரியான கொல்லேரு ஏரி அமைந்துளளது.**

**இ) கிருஷ்ணா மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள மேற்க தொடர்ச்சி மலையில் மகா பலைலஷ்வர் என்ற பகுதியில் ஊறறாக உருவாகி சுமார் 1400 கி.மீ நீளம் வனரயும் 2.58 இலட்சம் ச.கி.மீ பரப்பளவு வடிநிலத்னெக பகாணடிருககிறது. இது தீபகறப ஆறுகளில் இரணடாவது பெரிய நதியாகும். கொய்னா, பீமா, முசி, துங்கபத்ரா மற்றும் பெடவாறு பேன்றனவ இவ்வாற்றின் முக்கிய துனையாறுகளாகும். இந்நதி ஆந்திரப்பிரதேத்தின் வழியாக பாய்ந்து ஹம்சலாதேவி என்ற இடத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.**

- **ஈ) காவேரி ஆறு கர்நாடக மாநிலத்தில் குடகு மலையிலுள்ள தலைக்காவோரி உற்பத்தியாகி சுமார் 800 கி.மீ நீளத்துக்கு பாய்கிறது. இது தென் இந்தியாவின் கங்கை என்றும் அழைககப்படுகிறது. ஹரங்கி, ஹேமாவதி, கபினி, பவானி, அர்காவதி, நொய்யல், அமராவதி ஆகியவை காவிரியின் துணை ஆறுகளாகும். கர்நாடகாவில் இரண்டாக பிரிந்து சிவசமுத்திரம் மற்றும் ஸ்ரீரங்கப்பட்டிம் ஆகிய புனித ஆற்றுத் தீவுகளை உருவாக்குகிறது. பின்பு தமிழ்நாட்டில் நுழைந்து தொடர்சசியான மற்றும் குறுகான மலையிடுக்குகள் வழியாக ஒகனக்கல் நீர் வீழ்ச்சியாக பாய்கிறது. பின்பு திருச்சிராப்பள்ளிக்கு முன் ஸ்ரீரங்கம் அருகில் கொள்ளிடம், மற்றும் காவேரி எனஇரண்டு**

| | | |
|---|---|---|
| | பிரிவுகளாக பிரிந்து இறுதியில் பூம்புகார் என்ற இடத்திறகு அருகில் வங்க கடலில் கலக்கிறது.<br>மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்<br>❖ நர்மதை<br>மத்திய பிரதேசத்தில் உள்ள அமர்கண்டாக் பீடபூமியில் 1057 மீ உயரத்தில் உற்பத்தியாகி 1312 கிமீ நீளத்ததையும் 98796 ச. கி. மீ பரப்பளவு வடிநிலத்தையும் கொண்ட தீபகற்ப இந்தியாவில் மேற்கு நோக்கி பாயும் நதியாகும். இது 27 கி.மீ நீளத்திற்கு ஒரு நீண்ட கழிமுகத்தை உருவாக்கி காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கிறது. இது மேற்கு நோக்கி யாயும் ஆறுகளிலேயே நீளமானதாகும். பர்னா. ஹலுன், ஹெரன், பஞ்சர், தூதி, சக்கார் டவா மற்றும் கோலர் ஆகியவை இத்ன முதன்மையாக துணையாறுகள் ஆகும்.<br>❖ தபதி<br>➢ தபதி ஆறு தீபகற்ப இந்தியாவின் முக்கிய ஆறுகளின் உள்றாகும். இந்நதி 724கி.மீ நீளத்தையும் 65145 ச.கி.மீ பரப்பளவு வடிநிலத்தை கொண்டது. இந்நதி மத்திய பிரதேசத்தில் உள்ளபெட்டுல் மாவட்டத்தில் கடல் மட்டத்திலிருந்து 752மீ உயரத்தில் முல்டாய் என்ற இடத்திலிருந்து உற்பத்தியாகிறது பின்பு காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது. தீபகற்ப இந்திய ஆறுகளில் நர்மதை. தபதி மற்றும் மாஹி ஆகிய மூன்று ஆறுகள் மட்டுமே கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி பாய்கினறன. வாகி , கோதுமைஈ அருணாவதி அனெர், நீசு புரெ, பஞ்சரா மற்றும் போரி ஆகியன தபதி ஆற்றின் துணை ஆறுகள் ஆகும் | |
| 30. | (table below) | 5 |

| அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தம் கோட்பாடுகள் |
|---|---|
| இவைஅமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை | இவை அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை. |
| அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல் ஆகும் |
| இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும். | எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப் படுத்தமுடியாது |
| இவைசட்ட ஒப்புதலைப் பெற்றவை | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை |
| இந்தஉரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன | இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது |
| இவைஇயற்கையான உரிமைகள் | இவைமனித உரிமைகளைப் பாதுகாக்க வழிவகுக்கிறது |

| | | |
|---|---|---|
| 31. | நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய கருத்துகள் ஏதேனும் நான்கு மட்டும்<br>நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்தமதிப்பாகும். பொதுவாகநாட்டு வருமானத்தைமொத்தநாட்டு உற்பத்தி (GNP) அல்லது நாட்டு வருமானஈவு எனப்படுகிறது. | 5 |

1.1.1 நாட்டு வருமானத்தைஅளவிடதொடர்புடைய பல்வேறு கருத்துக்கள்

**1. மொத்தநாட்டு உற்பத்தி (GNP)**

மொத்தநாட்டு உற்பத்தி என்பது அந்தநாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும். **GMP = C + I + G + (X – M) + NFIA**

C – நுகர்வோர்

I – முதலீட்டாளர்

G – அரசு செலவுகள்

X – M – ஏற்றுமதி – இறக்குமதி

NFIA – வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகரவருமானம்.

**2. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)**

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்) களின் மொத்தமதிப்பேமொத்தஉள்நாட்டு உற்பத்தியாகும்.

**3. நிகரநாட்டு உற்பத்தி (NNP)**

மொத்தநாட்டு உற்பத்தியிலிருந்து மூலதனதேய்மானத்தின் மதிப்பைநீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகரநாட்டு உற்பத்தியாகும்.

நிகரநாட்டு உற்பத்தி (NNP) = மொத்தநாட்டு உற்பத்தி (GNP) – தேய்மானம்.

**4. நிகரஉள்நாட்டு உற்பத்தி (NDP)**

நிகரஉள்நாட்டு உற்பத்தி என்பது மொத்தஉள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும். மொத்தஉள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மானசெலவின் அளவு) கழித்து பின் கிடைப்பது நிகரஉள்நாட்டு உற்பத்தியாகும்.

நிகரஉள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்தஉள்நாட்டு உற்பத்தி (GDP) – தேய்மானம்.

**5. தலாவருமானம் அல்லது தனி நபர் வருமானம் (PCI)**

தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும். நாட்டு வருமானத்தைமக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.

6. தனிப்பட்ட வருமானம் (PI)

நேர்முகவரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்றமொத்தபண வருமானத்தைதனிப்பட்ட வருமானம் எனலாம்.

தனிப்பபட்ட வருமானம் = நாட்டு வருமானத்தில் பெறு நிறுவனங்களின் வருமானவரி – பெரு நிறுவனங்களின் பகிர்ந்தளிக்கப்படாத வருவாய்– சமூகபாதுகாப்பு பங்களிப்பு +

<table>
<tr><td></td><td>மாற்று வருவாய்.<br><br>7.செலவிடத்தகுதியானவருமானம் (DI)<br><br>தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப் படுகின்ற வருமானத்தை செலவிடத் தகுதியான வருமானம் எனப்படுகிறது.<br><br>இதனை இவ்வாறு அழைக்கலாம்.<br><br>DPI = தனிப்பட்ட வருமானம் – நேர்முக வரி<br><br>(நுகர்வு முறையில் DI = நுகர்வுச்செலவு + சேமிப்பு)</td><td></td></tr>
<tr><td>32.</td><td>பிரிவு - VI (மதிப்பெண்கள் 5)<br>காலக்கோடு1910 முதல் 1920 வரை</td><td></td></tr>
<tr><td></td><td>அளவுத்திட்டம்: (1 அலகு = 5 ஆண்டுகள்)<br></td><td></td></tr>
<tr><td>33.</td><td>இந்திய வரைபடம் (ஏதேனும் ஐந்து இடங்கள் மட்டும்)<br></td><td>5</td></tr>
</table>

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# SHRI KRISHNA ACADEMY

✍ CREATIVE QUESTIONS ,MATERIALS(GUIDE), FULL TEST QUESTION PAPERS, ONE MARK TEST QUESTION PAPER for X, XI, XII AVAILABLE in ALL SUBJECTS.

→ For MORE DETAILS - 99655 31727 , 94432 31727

நாமக்கல் மாவட்டம்

N

## முதல் இடைப்பருவத் தேர்வு ,- ஜூலை 2019
## பத்தாம் வகுப்பு
## சமூக அறிவியல்

நேரம் : 1.15 மணி மதிப்பெண்கள்:50

**I .சரியான விடையை தேர்வு செய்க:** 5 x 1 = 5

1. " ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச சட்டம் " எனக் கூறியவர் யார் ?
   (அ) லெனின் (ஆ) மார்ஸ்
   (இ) சன்யாட் சென் (ஈ) மா சே துல்
2. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்
   1) வங்கித் தொழில் யூதர்களின் முக்கியமான வணிக நடவடிக்கையாகும்
   2) ஹிட்லர் யூதர்களைத் துன்புறுத்தினார்
   3) சித்ரவதை முகாம்களில் யூதர்கள் கொல்லப்பட்டனர்
   4) தற்போது ஐக்கிய நாடுகள் சபை 129 நாடுகளை உறுப்பு நாடுகளாகக் கொண்டுள்ளது .
   (அ) 1 , 2 சரி (ஆ) 1, 3 சரி
   (இ) 3 , 4 சரி (ஈ) 1 சரி மற்றும் 2, 3, 4 தவறு
3. உலகிலேயே மிக நீளமான அணை _______
   (அ) மேட்டூர் அணை (ஆ) கோசி அணை
   (இ) ஹிராகுட் அணை (ஈ) பங்ராங்கல் அணை
4. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்
   (அ) குடியரசுத் தலைவர் (ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைநர்
   (இ) ஆளுநர் (ஈ) பிரதம அமைச்சர்
5. இந்திய பொருளாதாரம் என்பது
   (அ) வளர்ந்து வரும் பொருளாதாரம் (ஆ) தோன்றும் பொருளாதாரம்
   (இ) இணை பொருளாதாரம் (ஈ) அனைத்தும் சரி

**II.கோடிட்ட இடத்தை நிரப்புக:** 4 x 1 = 4

6. நாசிக் ஜெர்மனியின் ரகசிய காவல் படை _______
7. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி _______
8. _______ பேராணைகள் சட்டப்பிரிவு 32- ல் குறிப்பிடப்படுகின்றன.
9. இந்தியா பொருளாதரத்தின் வளர்ச்சி இயந்திரம் _______ துறையாகும்

**III. பொருத்துக .** 5 x 1 = 5

| | | |
|---|---|---|
| 10. ஹின்டன் பர்க் | - | கடற்கரைப் பகுதி |
| 11. கடலோரக் காடுகள் | - | பண்ட மற்றும் பணிகள் மீதான வரி |
| 12. தேசிய அவரச நிலை | - | ஜெர்மனி |
| 13. GST | - | தங்கப் புரட்சி |
| 14. தோட்டக்கலை | - | 1962 |

**IV. சுருக்கமான விடையளி : (ஏதேனும் 5 )** 5 x 2 = 10

15. டாலர் ஏகாதிபத்தியம் ? தெளிவு பட விளக்குக .
16. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பீடுக .
17. இலட்சத்தீவு கூட்டல்கள் பற்றி விவரி .
18. " பருவ மழை வெடிப்பு என்றால் என்ன ?
19. நீதிபேராணை என்றால் என்ன ?
20. மத்திய அரசின் பல்வேறு அமைச்சர்களின் வகைகள் யாவை ?
21. GDP - யில் பங்களிப்புள்ள துறைகளை எடுத்துக்காட்டி எழுதுக.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



VII. கீழ்க்கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினை தேர்வு செய்க 4 x 1/2 = 2

22. தென் அமெரிக்க அரசியல் நிகழ்வுப் போக்குகள்

அ) ஒட்டுமொத்த தென் அமெரிக்காவும் எந்த ஆண்டில் ஐரோப்பிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது.

ஆ) மத்திய அமெரிக்காவில் எத்தனை குடியரசுகள் உருவாயின.

இ) எந்த ஆண்டில் கியூபா அமெரிக்காவால் கைப்பற்றப்பட்டது.

ஈ) தென் அமெரிக்காவில் குழுக்களின் ஆட்சிகள் பலராலும் விருப்பப்படாமைக்குக் காரணம் என்ன ?

23. ஸ்டாலின் கிரேடு போர்.

அ) ஜெர்மனி ஸ்டாலின் கிரைடே எப்போது தாக்கியது.

ஆ) ஸ்டாலின் கிரெடின் முக்கிய உற்பத்திப் பொருட்கள் யாவை ?

இ) ஸ்டாலின் கிரைடைத் தாக்குவதற்கு ஹிட்லர் தீட்டிய திட்டத்தின் பெயரென்ன ?

ஈ) ஸ்டாலின் கிரேடு போரின் முக்கியத்துவமென்ன ?

VI. கீழ்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு காரணம் கூறு : 2 x 1=2

24. இந்திய பெரும் பாலைவனம் பகுல்தவி என்று அழைக்கப்படுகின்றது

25. மழைநீர் சேகரிப்பு அவசியம்.

VII. கீழ்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றினை வேறுபடுத்துக : 2 x 1=2

26. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்.

27. ராபி பருவம் மற்றும் காரீஃப் பருவம்.

VII. கீழ்கண்ட பத்தி வினாக்களில் ஏதேனும் இரண்டிற்கு விடையளிக்க : 2 x 5=10

28. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக அதன் தோல்விக்கான காரணங்களையும் குறிப்பிடுக.

29. தீபகற்ப ஆறுகளைப் பற்றி கூறுக.

30. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையத்துவம் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

31. நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவதற்கு தொடர்புடைய ஏவையேனும் நான்கு கருத்துகளை விவரி.

VIII. காலக்கோடு வினா : 5 x 1=5

32. 1910 முதல் 1920 வரையுள்ள முதல் உலகப்போரின் ஐந்து முக்கிய நிகழ்வுகளை வரைக.

IX. கீழ்கண்ட இடங்களை இந்தியா வரைபடத்தில் வரைக ( ஏவையேனும் ஐந்து ) 5 x 1=5

1) காரகோரம்

2) மாளவபீடபூமி

3) காவிரி

4) தென்மேற்கு

5) சுந்தரவனக்காடுகள்

6) வண்டல் மண் காணப்படும் பகுதி

7) சணல் விளையும் பகுதி

********